25.08.2025

புதுக்கோட்டை, ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறையின் கலை அருவி இலக்கியப்பேரவை, சார்பாக தமிழ்த்துறை மாணவ மாணவிகள் களவழிகற்றல் தொடர்பாக 23.08.2025 சனிக்கிழமை கீழடிக்குச் சென்றனர்.

இந்நிகழ்வில் மதுரை பாண்டிய நாடு பண்பாட்டு மையம் தொல்லியல் ஆய்வாளர் முனைவர் தாமரைகண்ணன் மாணாக்கர்களுக்கு “கீழடி நம் தாய் மடி” என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கினார்.

அவர்தம் உரையில் மனிதர்களின் தோற்றத்தையும் பரிணாமத்தையும் கண்டறிந்து உலகில் பல்வேறு முயற்சிகள் செய்து அறிவியல் முறைப்படி நிறுவிவருகின்றனர். அந்த வகையில் மனிதனின் வாழ்வியல் முறை எப்பொழுது தொடங்கியது? எந்த வழி நாகரீகம்? மனிதர்கள் பயன்படுத்திய கருவிகள், பொருட்கள், உலோகங்கள் போன்றவற்றைக் கண்டறிய இந்தியா முழுவதும் பல அகழாய்வு பணிகள் நடைபெற்று வருந்ன்றன. குறிப்பாக தமிழகத்தில் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சிவகங்கை மாவட்டம், கீழடி, கொந்தகை இடங்களில் இந்திய தொல்லியல்துறை 2014 ஆண்டுகளிலிருந்து, தொல்லியல் துறை பேராசிரியர் முனைவர் அமர்நாத் அவர்களின் முயற்சியில் அகழாய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். இதில் ஆற்றங்கரை நாகரீகம், நகர வாழ்வியல் முறைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்விடங்களில் மண்பாண்டங்கள், முதுமக்கள்தாழி, நெசவுத்தொழில்தக்களி அவற்றில் எழுதப்பட்ட எழுத்துக்கள், ஓவியங்கள், பெயர்கள், மணிகள், உறைகள், இரும்புப்பொருட்கள் போன்றவை கிடைத்துள்ளன. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றையும், சிவகளையில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்புக்கருவிகள் தமிழகத்தின் 4500 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட வரலாற்றையும காட்டுகின்றன. எனவே தற்பொழுது பத்தாம் கட்ட அகழாய்வு கீழடியில் நடைபெற்று வருகிறது. இதில் கிடைக்கும் பொருள்கள் மேலும் தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளை உலகறியச் செய்யும் எனக் கூறினார்.

அந்த வகையில் தொல்லியல் சார்ந்து படிக்கும் எழுத்துமுறைப் பயிற்சியை மாணாக்கர்கள் மேற்கொள்ள வேண்டும் அது தொல்லியல் சார்ந்த பார்வையை வளர்க்க உதவும் எனப் பேசினார்.

முன்னதாக இந்நிகழ்விற்கு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு.தயாநிதி தலைமை தாங்கி வரவேற்றார். முனைவர் கி.கோவிந்தன் நன்றி கூறினார்.